IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CC NO.472/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SHANMUGAM |
| FATHER'S NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | KALANGKUPPAM |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 4th day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 21.08.2024 ம் தேதி காலை 6.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜகுமாரி தலைமை காவலர் ரஞ்சித் மற்றும் நானும் மதுவிலக்கு தொடர்பாக திருவலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பொய்கை ஏராந்தாங்கல் லட்சுமிபுரம் பஜனை கோவில்தெருவில் கண்காணித்து கொண்டு போகும் போது ஒரு வீட்டிடம் நின்றுகொண்டிருந்த நபர் ஒருவர் அங்கு வந்தவரிடம் ஏதோ கொடுத்துக் கொண்டிருந்தார். வாங்கிய நபர் எங்களை கண்டதும் ஓடிவிட்டார். கொடுத்து கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை பார்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரித்த போது அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் பெயர் வள்ளி என்று கூறினார். அவரை பெண் உதவி ஆய்வாளர் ராஜகுமார் பரிசோதனை செய்தார். எதிரியிடம் இருந்து TN IMFL 180 ML அளவு கொண்ட OLD CHEF RUM 28 மதுபாட்டில்களை எதிரியிடமிருந்து கைப்பற்றினார். எதிரியிடமிருந்து TN அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் ரஞசித் என்பவரும் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். என்னிம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆலோகிராம்சீல் உடைக்கப்பட்டிருந்ததால் மதுபாட்டில்களை நிலையம் கொண்டு வர சாத்தியம் இல்லாததால் அழிப்பு மகசர் தயார் செய்து சம்பவ இடத்திலே கொட்டி அழிக்கப்பட்டது. அந்த அழிப்பு மகசரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். என்னுடன் ரஞ்சித் என்பவரும் கையொப்பம்

செய்தார். என்னிம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள 1வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ரோந்து பணிக்கு காவலர் ரஞ்சித் மற்றும் உதவி ஆய்வாளர் ராஜகுமாரி ஆகியோருடன் சென்றோம். சம்பவ இடம் குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். தோரயமாக 50 வீடு இருக்கும். அன்றை தினம் பொதுமக்கள் வேலைக்கு சென்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். எதிரியிடமிருநது கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுத்து நீதிமன்றம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அழிப்பு மகசர் தயார் செய்யும் போது வீடியோ பதிவு எடுத்து நீதிமன்றம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனிநபர்கள் யாரையும் சாட்சியமாக சேர்க்கமால் மேல் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று இருப்பேன் என்றும் சம்பவம் நடக்கவில்லை என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 04.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.